**சுயமாகப் பிரதிநிதித்துவமாகும் தரப்பினர்களுக்கான வழக்கு விசாரணை சரிபார்ப்புப் பட்டியல்**

இந்த ஆவணத்தில் வழக்கு விசாரணைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பது பற்றிய தகவல்கள் உள்ளன. இதில் உங்கள் வழக்கு விசாரணைக்குத் தயாராவதற்கு உதவும் சரிபார்ப்புப் பட்டியல்களும் இருக்கின்றன. சரிபார்ப்புப் பட்டியல் உருப்படிகளை மதிப்பாய்வு செய்யுங்கள் ☐. உங்களுக்குத் தேவையான அனைத்தும் இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குச் சரிபார்ப்புப் பெட்டியைப் பயன்படுத்துங்கள்.

## வழக்கு விசாரணைக்கு முன்பு

WSIAT பதவிநிலை உறுப்பினர் ஒருவர் உங்கள் கோப்பை மதிப்பாய்வு செய்து, உங்கள் மேன்முறையீட்டைப் பற்றிக் கலந்துரையாடுவதற்காக உங்களுக்கு அழைப்பு எடுப்பார். உங்கள் மேன்முறையீடு அடுத்த கட்டத்திற்குத் தயாராக இருந்தால், அவர்கள் மேன்முறையீட்டில் உள்ள சிக்கல்கள் தொடர்பான கடிதத்தை உங்களுக்கு அனுப்புவார்கள். மேன்முறையீட்டில் உள்ள சிக்கல்கள் தொடர்பான கடிதம் மேன்முறையீட்டின் முடிவு(கள்) மற்றும் சிக்கல்(கள்) ஆகியவற்றைக் கூறுகிறது. நீங்கள் மேன்முறையீட்டில் உள்ள சிக்கல்கள் தொடர்பான கடிதத்தைப் பெறும்போது, மேன்முறையீட்டில் உள்ள சிக்கல்களை உறுதிசெய்து, நாங்கள் கருத்திற் கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்பும் ஏதேனும் தகவலை எங்களுக்கு அனுப்புவதற்கு உங்களுக்கு 4 வாரங்கள் அவகாசம் உள்ளது. இது வெளிப்படுத்தல் காலகட்டம் என்று அழைக்கப்படும்.
**பின்வருவனவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்**

- ☐ நீங்கள் மேன்முறையீட்டில் உள்ள சிக்கல்கள் தொடர்பான கடிதம், வழக்குப் பதிவு மற்றும் பின்னிணைப்பு ஆகியவற்றை மதிப்பாய்வு செய்துள்ளீர்கள்
- ☐ நீங்கள் வழக்கு விசாரணைத் தயார்நிலை படிவத்தைப் பூர்த்தி செய்து, நாங்கள் கருத்திற் கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்பும் அனைத்து தகவல்களையும் எங்களுக்கு அனுப்பியுள்ளீர்கள். வெளிப்படுத்தல் காலகட்டத்திற்குப் பிறகு நீங்கள் எங்களுக்கு அனுப்பும் எந்தத் தகவலும் வழக்குப் பொருட்களில் சேர்க்கப்பட மாட்டாது.
- ☐ மற்ற தரப்பினர் பங்கேற்பதாக இருந்தால், அவர்கள் அனுப்பிய வழக்கு விசாரணைத் தயார்நிலை படிவத்தை நீங்கள் மதிப்பாய்வு செய்துள்ளீர்கள்
- ☐ நீங்கள் வழக்கு விசாரணைத் தயார்நிலை படிவத்தை மதிப்பாய்வு செய்துள்ளீர்கள். அது வழக்கு விசாரணையில் கலந்துரையாடப்படும் மேன்முறையீட்டில் உள்ள சிக்கல்களை உறுதிப்படுத்துகிறது.

## நீங்கள் வழக்கு விசாரணை அறிவித்தலைப் பெற்றதும்

வழக்கு விசாரணை அறிவித்தல் வழக்கு விசாரணையின் வடிவத்தை உங்களுக்குத் தெரிவிக்கும். அது பின்வருவனவற்றில் ஒன்றாக இருக்கலாம்

- ஒரு வீடியோ கன்ஃபரன்ஸ் வழக்கு விசாரணை (Zoom ஊடாகக் கணனியில்)

- ஒரு டெலி கன்ஃபரன்ஸ் வழக்கு விசாரணை (தொலைபேசியில்)
- நேரில் சமூகமளித்த வழக்கு விசாரணை

வழக்கு விசாரணை அறிவித்தலில் வழக்கு விசாரணையின் இணைப்பு அல்லது இருப்பிட விபரங்கள் உள்ளன. உங்களிடம் இந்த விபரங்கள் இல்லையென்றால், **உடனடியாக எங்களை அழைக்கவும்** - 416-314-8800 அல்லது 1-888-618-8846.

**பின்வருவனவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்**

☐ பின்வருவன போன்ற ஆவணப் பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து வழக்குப் பொருட்களும் உங்களிடம் உள்ளன

- வழக்குப் பதிவு
- பின்னிணைப்பு
- வழக்கு விசாரணைத் தயார்நிலைக் கடிதம்

இந்த அனைத்து ஆவணங்களும் உங்களிடம் இல்லையென்றால், தயவுசெய்து எங்களை அழைக்கவும் - 416-314-8800 அல்லது 1-888-618-8846

☐ உங்கள் வழக்கு விசாரணையில் நீங்கள் எவற்றைப் பகிர்ந்து கொள்ளப் போகிறீர்கள் என்பதை நீங்கள் தயார் செய்துள்ளீர்கள்

- நீங்கள் தயார்நிலையில் இருக்க உதவும் குறிப்புகளை உருவாக்கியுள்ளீர்கள்

☐ உங்கள் வழக்கு விசாரணைக்கு எவ்வாறு செல்வது என்பது உங்களுக்குத் தெரியும் (நேரில் சமூகமளிக்க வேண்டியிருந்தால்)

- உங்கள் வழக்கு விசாரணைக்கு எவ்வாறு செல்வது என்பதை மதிப்பாய்வு செய்துள்ளீர்கள்

☐ உங்கள் வழக்கு விசாரணையுடன் எவ்வாறு இணைவது என்பது உங்களுக்குத் தெரியும் (தொலைநிலையில் நிகழ்ந்தால் - வீடியோ கன்ஃபரன்ஸ் அல்லது டெலி கன்ஃபரன்ஸ் என்றால்)

☐ உங்கள் சாட்சிகளுக்கு வழக்கு விசாரணையில் எவ்வாறு கலந்துகொள்வது என்பது தெரியும் (நேரில் அல்லது தொலைவில்)

☐ உங்கள் தொலைநிலை வழக்கு விசாரணைக்கு அமைதியான மற்றும் தனிப்பட்ட இடம் உள்ளது (வழக்கு விசாரணை வீடியோ கன்ஃபரன்ஸ் அல்லது டெலி கன்ஃபரன்ஸ் என்றால்)

## வழக்கு விசாரணையில்

பொதுவாக, 3 பேர் கொண்ட குழு உங்கள் வழக்கு விசாரணையை விசாரிக்கும். இதில் உள்ளடங்குபவர்கள்

- ஒரு துணைத் தலைவர்
- தொழிலாளரின் ஒரு உறுப்பினர்
- பணியமர்த்துநரின் ஒரு உறுப்பினர்

வழக்கு விசாரணையின் தொடக்கத்தில் குழு தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளும். பதிவிற்காக உங்கள் பெயரைக் குறிப்பிடும்படி அவர்கள் கேட்பார்கள். வழக்கு விசாரணையின் ஆடியோ பதிவு செய்யப்படும்.

வழக்கு விசாரணையில் 3 கட்டங்கள் உள்ளன

1. தொடக்க வாக்குமூலங்கள்
2. சாட்சியம் மற்றும் கேள்விகள்
3. முடித்தலுக்கான வாக்குமூலங்கள்

### 1. தொடக்க வாக்குமூலங்கள்

நீங்கள் குழுவுக்கு உங்கள் தொடக்க வாக்குமூலத்தை வழங்குவீர்கள். உங்கள் தொடக்க வாக்குமூலம் உங்கள் வழக்கின் சுருக்கமான மேலோட்டமாகும். நீங்கள் இவற்றை விளக்க வேண்டும்

- நீங்கள் முடிவை(களை) ஏன் மேன்முறையீடு செய்கிறீர்கள் அல்லது முடிவுக்கு(களுக்கு) ஏன் பதிலளிக்கிறீர்கள்
- நீங்கள் என்ன முடிவைப் பெறுவதை எதிர்பார்க்கிறீர்கள்

**இவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்**

☐ உங்கள் தொடக்க வாக்குமூலத்தை நீங்கள் தயார் செய்துள்ளீர்கள்

☐ உங்கள் குறிப்புகளைக் கொண்டு வந்துள்ளீர்கள், எனவே உங்கள் எல்லாக் கருத்துக்களையும் நீங்கள் சமர்ப்பிக்கலாம்

### 2. சாட்சியம் மற்றும் கேள்விகள்

உங்கள் கதையை நீங்கள் எவ்வாறு பகிர்ந்து கொள்கிறீர்கள் என்பதே உங்கள் சாட்சியமாகும்.

**உங்கள் சாட்சியத்தை நீங்கள் தயார் செய்யும் போது, பின்வருவனவற்றை உறுதி செய்து கொள்ளுங்கள்**

☐ மேன்முறையீட்டின் கீழ் உள்ள சிக்கல்கள் தொடர்பான உங்கள் வழக்கின் வரலாற்றை நீங்கள் வழங்கியுள்ளீர்கள்

☐ உங்கள் நிலைப்பாட்டை ஆதாரங்கள் எவ்வாறு ஆதரிக்கின்றன என்பதை விளக்கியுள்ளீர்கள்

  - அவசியப்பட்டால், குறிப்பிட்ட மருத்துவச் சான்றுகளை அடையாளம் காண வழக்குப் பொருளில் உள்ள பக்க எண்களைக் குறிப்பிட்டுள்ளீர்கள்

மற்ற தரப்பினர் உங்களிடம் கேள்விகளைக் கேட்கலாம் (அவர்கள் பங்கேற்று இருந்தால்). குழு உறுப்பினர்களும் உங்களிடம் கேள்விகளைக் கேட்கலாம்.

பணியமர்த்துநர் அல்லது பிற தரப்பினர்கள் சாட்சியமளிக்கலாம்.

நீங்கள் மற்ற சாட்சிகளிடம் கேள்விகளைக் கேட்கலாம். குழுவும் மற்ற சாட்சிகளிடம் கேள்விகளைக் கேட்கலாம்.

### 3. முடித்தலுக்கான வாக்குமூலங்கள்

அனைவரும் சாட்சியமளித்த பிறகு, குழு உங்கள் முடித்தலுக்கான வாக்குமூலத்தைக் கேட்கும்.

**உங்கள் முடித்தலுக்கான வாக்குமூலம் இவ்வாறு அமைவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்**

- ☐ உங்கள் மேன்முறையீட்டைப் பற்றி நீங்கள் செய்ய விரும்பும் முக்கிய கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுகிறது
- ☐ நீங்கள் வெற்றிபெற வேண்டும் என்று நீங்கள் நம்புவதற்கான காரணங்களை உள்ளடக்குகிறது
- ☐ மேன்முறையீட்டில் வெற்றி பெற்றால் நீங்கள் எதைப் பெற விரும்புகிறீர்கள் என்பதை விளக்குகிறது

பணியமர்த்துநர் அல்லது பிற தரப்பினரும் தங்கள் முடித்தலுக்கான வாக்குமூலத்தை முன்வைப்பதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள் (அவர்கள் பங்கேற்றால்).

**எங்கள் தீர்மானம்**

நாங்கள் எமது தீர்மானத்தை வழக்கு விசாரணைக்குப் பிறகு எழுத்துப்பூர்வமாக உங்களுக்கு அனுப்புவோம்.